# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 16.09.2019</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 5587/B/18</u>**

திரு.R.பழனிசாமி — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், வீரபாண்டி,
சேலம் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

## <u>ஆணை</u>

இவ்வாணையத்தால் இன்று (16.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.R.பழனிசாமி அவர்கள் ஆஜரானார். பொதுத்தகவல் அலுவலர், திருN.அருணாசலவேலவன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வீரபாண்டி வட்டார வளர்ச்சி அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 21.05.2018 தேதியிட்ட மனுவில், பெரியசீரகாபாடி ஊராட்சியில் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகள் எத்தனை உள்ளன என்பது குறித்தும், பெரியசீரகாபாடி ஊராட்சியில் மொத்தம் எவ்வளவு OHT ஆப்ரேட்டர்கள் உள்ளன என்பது குறித்தும், அவர்களுக்கு எவ்வளவு சம்பளம் என்ற பெயர்கள் விவரம் குறித்தும், பெரியசீரகாபாடி ஊராட்சியில் மொத்தம் எவ்வளவு OHT துணை ஆப்ரேட்டர்கள் உள்ளன என்பது குறித்தும், மேலும் இது சம்பந்தமாகவே 10 இனங்களில் தகவல் கோரி சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார்.

3. தமக்கு தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்றுத் தருமாறு தெரிவித்து 26.06.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை சேலம் மாவட்ட ஆட்சியர்

அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 29.07.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (16.09.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் சேகரித்து வழங்க வேண்டிய காரணத்தால், கால அவகாசம் அளிக்கும் பட்சத்தில், 7 நாட்களுக்குள் மனுதாரருக்கு வழங்கி விடுவதாக விசாரணையின்போது உறுதியளித்தார். இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரரும் அதற்கு சம்மதம் தெரிவித்தார்.

5. எனவே இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுக்கின்றன:-

மனுதாரருக்குரிய தகவலை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 7 நாட்களுக்குள் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, மனுதாரர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலுடன் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து ஆணையத்திற்கு 15 நாட்களுக்குள் அனுப்பி வைக்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்திரவிடுகிறது.

தவறும் பட்சத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதை ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு எச்சரிக்கிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 5587/B/18</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், வீரபாண்டி,
சேலம் மாவட்டம்.

திரு.R.பழனிசாமி, த/பெ.ராமசாமி,
க.எண்.5/218-81 சமத்துவபுரம்,
சின்ன சீரகாபாடி (அஞ்சல்),
வீரபாண்டி வழி,
சேலம் மாவட்டம் - 636 308

Copy to: File / Stock File
SC/PA/17.09.2019